INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

# வலுவான நாளைய எதிர்காலத்திற்காக பாதுகாப்பான நாட்டை உருவாக்குதல்

25 YEARS OF PRUDENT REGULATION 2001 - 2026

**இலங்கையின் காப்புறுதித் தொழிற்துறை புதிய மாற்றத்தின் காலக்கட்டத்திற்குள் நுழைகிறது.**

இலங்கையின் காப்புறுதித் தொழிற்துறைக்கான புதிய அத்தியாயம் தொடங்குகிறது.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL), இலங்கை காப்புறுதிச் சங்கம் (IASL) மற்றும் காப்புறுதி தொழிற்துறையின் முக்கிய பங்குதாரர்கள் இணைந்து, பல முக்கியமான தேசிய முன்னெடுப்புகளையும், இலங்கையின் காப்புறுதி தொலைநோக்கு 2030 மற்றும் 2035, எனும் திட்ட வரைபடத்தையும் பெருமையுடன் அறிவிக்கின்றனர். இது நாட்டின் நிதி பாதுகாப்பு, தாங்கும் திறன் மற்றும் நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

## தொடங்கப்பட்ட முக்கிய தேசிய முன்னெடுப்புகள்

- காப்புறுதிக் தொழிற்துறை மேம்பாட்டு வழிகாட்டி (தொலைநோக்கு 2030 மற்றும் 2035)
- ஒருமுகப்படுத்தப்பட்ட காப்புறுதி தரவு சேமிப்பகம் (CRIB ஒருங்கிணைப்புடன்)
- இலத்திரனியல் மோட்டார் காப்புறுதி அட்டை மற்றும் தேசிய மோட்டார் காப்புறுதி சரிபார்ப்பு முறைமை
- பிரதான சுற்றறிக்கை மற்றும் காப்புறுதித் தவணைக்கட்டண உத்தரவாதம் (PPW)
- IRCSL மின்னிதழ்

## தொழிற்துறையை மாற்றியமைத்தல்

இந்த முன்னெடுப்புகள் வழிவகுக்கும்:

- ✓ மலிவான மற்றும் நம்பகமான காப்புறுதிக்கான சிறந்த அணுகல்
- ✓ வலுவான நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை
- ✓ டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் தரவு அடிப்படையிலான முடிவெடுத்தல்
- ✓ நவீன, தாங்கும் திறன் கொண்ட மற்றும் அனைவரும் பங்குகேற்கும் காப்புறுதித் துறை

### இலங்கையின் காப்புறுதித் தொழிற்துறை 2030 மற்றும் 2035

வலுவான நாளைய எதிர்காலத்திற்காக பாதுகாப்பான நாட்டை உருவாக்குதல்

இலங்கை, 2035 ஆம் ஆண்டிற்குள், குடும்பங்களை வலுப்படுத்தவும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை உறுதிப்படுத்தவும், வணிகங்கள் நம்பிக்கையுடன் வளர உதவவும் செய்யும் வகையில் சமூகத்தின் அனைத்து தரப்புகளிலும் காப்புறுதிப் பாதுகாப்பை கணிசமாக விரிவுபடுத்தல் வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**இந்த மாற்றம் ஏழு தூண்களைக் கொண்ட மூலோபாயத்தின் வழிகாட்டுதலின்கீழ் நடைபெறும்:**

1. காப்புறுதிப் பாதுகாப்பு மற்றும் தயாரிப்பு புத்தாக்கம்
2. விநியோகம் மற்றும் டிஜிட்டல் இணைப்பு
3. வரி மற்றும் ஒழுங்குமுறைத் தெளிவு
4. மூலதனம், கடன்தீர்த்தல் திறன் மற்றும் முதலீடு
5. தரவு, நடத்தை மற்றும் நுகர்வோர் நம்பிக்கை
6. திறமை, வேலைவாய்ப்பு மற்றும் நிதி அறிவு
7. செயலாக்கம், ஆளுகை மற்றும் நிலைபேறு

**எங்களின் கூட்டு உறுதிப்பாடு**

உயிர்களை பாதுகாப்பது.
வியாபாரங்களை வலுப்படுத்துவது.
நாட்டை முன்னேற்றுவது.

## நாட்டை வலுப்படுத்துதல்

இந்த கூட்டு முயற்சிகளின் மூலம், காப்புறுதி தொழில்துறை உறுதியான செயல்திறன் கொண்ட பொருளாதாரத்திற்கான அடித்தளத்தை அமைத்துக் கொண்டிருக்கிறது. இதில் வாழ்வாதாரங்கள் பாதுகாக்கப்படுகின்றன, வியாபாரங்கள் ஆதரிக்கப்படுகின்றன, மேலும் அதிகரித்து வரும் நிச்சயமற்ற மற்றும் காலநிலை-உணர்வுள்ள உலகிற்கு சமூகங்கள் சிறப்பாகத் தயாராகின்றன.

## ஒன்றிணைந்து, நாம் இலங்கையின் எதிர்காலத்தை காப்புறுதி செய்கின்றோம்.



### தலைவரின் செய்தி

**நம்பிக்கையும் உறுதியும் கொண்ட 25 ஆண்டுகள்**

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 25ஆம் ஆண்டு விழாவை நாம் கொண்டாடும் இந்த தருணத்தில், காப்புறுதியாளர்களைப் பாதுகாக்கவும் நாட்டின் நிதி அமைப்பை வலுப்படுத்தவும் நாம் மேற்கொண்ட பயணத்தைப் பற்றி நான் பெருமையடைகிறேன். 2001 மார்ச் 1ஆம் திகதி நிறுவப்பட்டதிலிருந்து, காப்புறுதி ஒவ்வொரு குடிமகனுக்கும் நம்பகமான, வெளிப்படையான மற்றும் எளிதில் அணுகக்கூடிய பாதுகாப்பு வலயமாக அமைய வேண்டும் என்ற எங்கள் அர்ப்பணிப்பு ஒருபோதும் மாறவில்லை.

கடந்த 25 ஆண்டுகளில், கடுமையான பொருளாதார நிலையின்மை, வேகமான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் இதற்கு முன் காணாத உலகளாவிய சவால்கள் ஆகியவற்றை எதிர்கொண்டு இந்தத் தொழிற்துறையை ஆணைக்குழு வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளது. சமகால ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புகளை ஏற்றுக்கொண்டும் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதன் மூலமும் தேசிய நிலைத்தன்மைக்கு அடித்தளமாக அமையும் வலுவான மற்றும் உள்ளடக்கிய சூழலை உருவாக்கியுள்ளோம்.

எங்கள் எதிர்காலக் கண்ணோட்டம் தெளிவாகவே தொடர்கிறது: "அனைவருக்கும் காப்புறுதி – பாதுகாப்பான எதிர்காலத்திற்காக." முழுமையான டிஜிட்டல் மாற்றமே இப்போது எங்கள் புதிய மூலோபாய முன்னுரிமையாகும். InsurTech ஒருங்கிணைப்பும், டிஜிட்டல் அணுகுமுறைகளை எளிமைப்படுத்தல் மூலம் நிதி பாதுகாப்பை எளிமைப்படுத்தி மேம்படுத்துவதே எங்கள் நோக்கம் ஆகும். மேலும், உருவாகும் காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ள, பொருளாதாரத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் நிலையான காப்புறுதி நடைமுறைகளை மேம்படுத்துவதிலும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

நிதி அமைச்சு, எங்கள் அர்ப்பணிப்பான ஊழியர்கள் மற்றும் தொழிற்துறை சார்ந்த அனைத்து பங்குதாரர்களுக்கும் அவர்களின் உறுதியான ஆதரவுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெள்ளி விழாவை முன்னிட்டு, சிறந்த நிலை, புதுமை மற்றும் நாட்டிற்கு தொடர்ந்த சேவை ஆகியவற்றிற்கான எங்கள் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். அடுத்த 25 ஆண்டுகளில் ஒவ்வொரு இலங்கையரும் மேலும் பாதுகாப்பும் வளமும் அடைவதை நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து உறுதி செய்வோம்.

**டாக்டர் டபில்யூ. ஏ. ரவீந்திர டி மெல் - தலைவர் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL)**



### பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

**ஒழுங்குமுறைப்படுத்தலில் சிறப்பும் எதிர்காலப் பயணமும்**

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வெள்ளி விழாவை நாம் கொண்டாடும் இந்த தருணத்தில், நாட்டின் காப்புறுதித் தொழிற்துறையை நேர்மை, தொழில்முறைத் திறன் மற்றும் காப்புறுதியாளர்களை பாதுகாக்கும் உறுதியான அர்ப்பணிப்புடன் வழிநடத்திய 25 ஆண்டுகளைப் பற்றி பெருமையுடன் நினைவுகூருகிறோம். கடந்த காலாண்டு நூற்றாண்டில், வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட அணுகுமுறைக்கு தொழிற்துறையை மாற்றுவதில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு முக்கிய பங்கு வகித்ததுடன், தொழிற்துறை முழுவதிலும் நிலைத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுக்கநெறிகளை உறுதிப்படுத்தியுள்ளது.

எங்கள் முக்கிய சாதனைகளில், பயனுள்ள குறைதீர்க்கும் முறைகள் நிறுவல், போதுமான மூலதனத் தேவைகளின் கடுமையான அமலாக்கம் மற்றும் பொதுமக்களின் காப்புறுதி அறிவை மேம்படுத்தவும் மற்றும் காப்புறுதியாளர்களைப் பாதுகாக்கவும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் உள்ளடங்கும். இந்த முயற்சிகள், நன்றாக மூலதனமுள்ள காப்புறுதி நிறுவனங்களும் தொழில்முறை இடைத்தரகர்களும் கொண்ட நிலையான மற்றும் தாங்கும் திறன் வாய்ந்த சந்தையை உருவாக்க உதவியுள்ளன. இதன் மூலம் காப்புறுதித் தொழிற்துறையின் மீது பொதுமக்களின் நம்பிக்கை மேலும் வலுவடைந்துள்ளது. 2035 நோக்கத்தைக் கருத்தில் கொண்டு முன்னேறும்போது, மேலும் நெகிழ்வானதும் தரவு சார்ந்ததுமான ஒழுங்குபடுத்துனராக உருவாகுவதில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு உறுதியாக உள்ளது. டிஜிட்டல் கட்டமைப்புகளில் மேற்கொள்ளப்படும் மூலோபாய முதலீடுகள், நேரடி கண்காணிப்பு முறைமைகள் மற்றும் தானியக்கமான இணக்கத்தன்மை கண்காணிப்பு முறைகள் மூலம் ஒழுங்குமுறை திறனும் விரைவான பதிலளிக்கும் திறனும் மேலும் மேம்படும். அதேவேளை, எதிர்கால முயற்சிகளில் நுண் காப்புறுதியும், எளிமைப்படுத்தப்பட்ட காப்புறுதித் தயாரிப்புகளும் அதிக முக்கியத்துவம் பெறும் இதன் மூலம் பாதுகாப்பு இடைவெளியை குறைத்து, காப்புறுதி அனைத்து இலங்கையர்களுக்கும் எளிதில் அணுகக்கூடியதும் செலவினத்திற்கு ஏதுமானதாக மாற்றப்படும்.

இந்த முக்கியமான நிகழ்வை முன்னிட்டு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் அர்ப்பணிப்புள்ள ஊழியர்களுக்கும் எங்கள் மதிப்பிற்குரிய தொழிற்துறை பங்குதாரர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களின் தொழில்முறைத் திறன், நிபுணத்துவம் மற்றும் ஒத்துழைப்பு மனப்பான்மை எங்கள் வெற்றியின் அடித்தளமாக அமைந்துள்ளது. நாம் ஒன்றிணைந்து, காப்புறுதித் தொழிற்துறையை மேலும் வலுப்படுத்தி, இலங்கையின் நிலைத்தன்மை, வளர்ச்சி மற்றும் செழிப்பிற்கு தொடர்ந்து பங்களிப்போம்.

**தமயந்தி பெர்னாண்டோ - பணிப்பாளர் நாயகம் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL)**



### இலங்கை காப்புறுதிச் சங்கத் தலைவர் அவர்களின் செய்தி

இலங்கை காப்புறுதிச் சங்கத்தின் சார்பில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 25வது ஆண்டுகால உதயத்திற்கு என் இதயபூர்வமான வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். கடந்த பல ஆண்டுகளாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, நிலைத்திருக்கும், வெளிப்படையான மற்றும் எதிர்காலத்தை நோக்கிய காப்புறுதி தொழிற்துறையை கட்டியெழுப்புவதில் முக்கியமான பங்கு வகித்துள்ளது. அது, இடர் அடிப்படையிலான ஒழுங்குமுறை, வலுவான மேற்பார்வையுனும் பயனாளர் பாதுகாப்புடனும் தொடர்ந்து முன்னேறுவதால், தொழில்துறை நம்பிக்கை மற்றும் உறுதுணையை பலப்படுத்தியுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான தொலைநோக்கை வரவேற்கின்றோம், அதில் காப்புறுதி ஆதாரமான அறிவுதொடர்பு, தரவுகள் சார்ந்த முறைமைகள் மற்றும் பெரிதும் பொது விழிப்புணர்வு ஆகியவற்றின் மூலம் காப்புறுதிப் பரவல் விரிவடையும் என நம்புகின்றோம். இந்த முயற்சிகள், அனைத்து இலங்கையர்களுக்கும் காப்புறுதியை மேலும் அணுகக்கூடியதும் பொருந்தக்கூடியதுமாக மாற்றுவதற்கு முக்கியமானவை. இலங்கை காப்புறுதிச் சங்கமானது, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து, ஒரு மேலும் உள்ளடக்கம் வாய்ந்த, எதிர்காலத்திற்கு தயாராக உள்ள காப்புறுதி கட்டமைப்பைக் கட்டியெழுப்பத் தொடர்ந்து பணியாற்றும்.

**லசித்த விமலரத்ன - தலைவர், இலங்கை காப்பறுதிச் சங்கம் (IASL)**



### இலங்கை காப்புறுதி தரகர் சங்கத் தலைவர் அவர்களின் செய்தி

இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தின் சார்பில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 25ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு எங்கள் உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முக்கியமான நிகழ்வு தொழில்முறைத் திறன், ஒத்துழைப்பு மற்றும் தொழிற்துறை முன்னேற்றம் ஆகியவற்றின் நிலைத்த அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இவை அனைத்தும் நாம் பெருமையுடன் பகிர்ந்து பாதுகாத்து வரும் மதிப்புகளாகும்.

**ஏன்ஸ்லி ஜே. அல்லஸ் - தலைவர் இலங்கை காப்புறுதி தரகர் சங்கம் (SLIBA)**



### இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் தலைவர் அவர்களின் செய்தி

இலங்கை காப்புறுதி நிறுவனம், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சிறப்பான 25ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு தனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. கடந்த 25 ஆண்டுகளில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஒழுங்குமுறைத் திறனை வலுப்படுத்துவதிலும், நுகர்வோர் நம்பிக்கையை மேம்படுத்துவதிலும், இலங்கையின் காப்புறுதித் தொழிற்துறையின் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்காற்றியுள்ளது. அதன் உறுதியான வழிகாட்டுதலை நாம் பாராட்டுகின்றோம் மேலும் தொழிற்துறையில் தொழில்முறைத் திறனை மேம்படுத்துவதற்கான தொடர்ந்த ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

**டாக்டர் சமீரா தர்மசேன - கவுன்சில் தலைவர்**
**இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)**



### இலங்கை காப்புறுதிக் கணிப்பீட்டு சங்கத்தின் தலைவர் அவர்களின் செய்தி

இலங்கை காப்பறுதிக் கணிப்பீட்டு சங்கம், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் 25ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு தனது இதயப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. நிலையான, வெளிப்படையான மற்றும் வலுவான காப்புறுதித் தொழிற்துறையை உருவாக்குவதற்கான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை நாம் பாராட்டுகிறோம். தொழில்முறைச் சிறப்பை மேம்படுத்தவும், பூட்கைதாரர்களின் நலன்களை பாதுகாக்கவும் எங்கள் தொடர்ந்த கூட்டாண்மையை எதிர்நோக்குகிறோம்."

**தனுஜா கிருஷ்ணரத்ன - தலைவர்**
**இலங்கை காப்பறுதிக் கணிப்பீட்டு சங்கம் (AASL)**

**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**
11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி: 011 2396184 - 9 | தொலைநகல்: 011 2396190 | மின்னஞ்சல்: info@ircsl.gov.lk | இணையத்தளம்: www.ircsl.gov.lk